www.tamilarangam.net

Raya

தை, மாசி 1990

# பள்ளம்



Collection "AUTOPORTRAITS" (2ème série)
1 **Arno Rafaël Minkkinen** Autoportrait, Helsinki, Finlande (1975)

போராடுவதற்காக கற்றுக்கொள்கிறோம்

கற்றுக்கொள்வதற்காக போராடுகின்றோம்

P RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மக்களது வாழ்வியலை
முன்னோக்கி நகர்த்திய
மரணங்களுக்கும்

எம் வாழ்வை அர்த்தமுள்ளதாக்க
தம்மை (எம்முள்) இழந்த
அனைத்து மக்களுக்கும்....

www.tamilarangam.net



# பள்ளத்திலிருந்து .....

...... இன்று இரண்டு விதமான இயக்கப் போக்குகள் நிலவுகின்றன.

1. புலிகள்: இந்திய எதிர்ப்புக்கூச்சல் நாடகம்.

2. ஈ.பி.அர்.எல்.எவ்: இந்திய அதிகாரத்துவத்தின் ஆதரவும்' விசுவாசமும்.

இரண்டு கும்பல்களினதும் அரசியல் (நடவடிக்) கைகளிலேயே எமது எதிர்காலம் தங்கியிருக்குமாறு எதிர்புரட்சிகர அரசியல் வளர்த்துச் செல்லப்படுகின்றது.

ஒருபுறம் தேசிய விடுதலைப் போராட்டத்தில் புலிகளை ஆதரிப்போரும்'

மறுபுறம் தேியசபையில் ஈ.பி.ஆர்.எல்.எவ்வை ஆதரிப்போருமாக நமது இடதுசாரி ஆதரவாளர்களும் காவடியாட்டும்போது பன்னீர் தெளிப்பது' தேசிய நீரோட்டத்தில் கூட்டத்தோடு கூட்டமாக ஒன்று கலப்பது மகிழ்ச்சிக்குரியது!

தேசிய இரத்தம் கடலில் கலக்கின்ற அளவிற்குப் பெருகியுள்ளது. பிரான்சில் எரிமலை' தமிழ்முரசு' தேடல் இம்மூன்றும் இயக்க முகாமிற்குள் மக்களை மீளக்கட்டிப்போடும் பொறுக்கி அரசியல் நடாத்திவருகின்றன.

தொடர்ச்சியான படுகொலைகளிற்கு வெளிநாடுகளில் தஞ்சமடைந்திருக்கும் மக்களை பங்காளிகளாக்கி வருகின்றன.

மக்களின் உழைப்பு இருபுறமும் ஆயுதங்களிற்காக உறவினர்களை வேட்டையாடுவதற்காக வறுகப்பட்டு ஏகாதிபத்தியங்களுக்குச் சென்றடைகின்றன.

இரண்டு கும்பல்களினதும் சின்னத்தனங்களை வேடிக்கை பார்க்கிறது இலங்கை_இந்திய ஆளும் வர்க்கம்.

நிராகரிக்கப்பட்ட இயக்கத்தலமைகள் நாய்களிலும் கேவலமாக எஜமானர்களின் காலடியில் சுறுண்டு படுத்துத் தஞ்சம் கோரியுள்ளன.

இயக்க வாதத்திலிருந்து மக்களை மீட்டெடுப்பதற்குப் பதில் இன்னமும் இவர்களுக்குள் ஒற்றுமையை ஏற்படுத்த எஞ்சிய புதிய தரகுக்கும்பலகள் முயற்சி செய்கின்றன.

_இதற்காக எல்லா இடங்களிலும் கணிசமாகப் பெற்றும் வருகின்றன.

www.tamilarangam.net



எல்லாக் கும்பல்களினதும் ஹீரோக்கள் ஒற்றுமையில் வேற்றுமை காண்பவர்கள். இவர்களது எதிர்காலம் பற்றிய பார்வையின்றி இவர்களை ஒற்றுமைபடுத்துவதென்ற ரீதியில் மீண்டும் இவர்கள் பற்றிய மாயையில் மக்களை மூழ்கடிப்பது கடுமையாக விமர்சிக்கப்பட வேண்டியதாகும்.

---

## தமிழில் நாடகம் .... பற்றி இருவர்

நாம் நாடகம் என எதைக் கருதுகிறோம், தமிழருக்கென ஒரு அரங்கு இருக்கின்றது. அது முதிர்ச்சியடைந்து உலக அரங்குகளுடன் போட்டிபோடக்கூடிய அளவிற்கு செழுமை மிக்கது. அதுதான் நாட்டுக்கூத்து. இது ஒரு வீரியமிக்க தமிழர்களின் தியேட்டர்.

-நாடக விமர்சகர்- காரை செ.சுந்தரம்பிள்ளை.

தமிழில் நாடகம் என்றால் கூத்து; அந்தக் கூத்து என்பது அபிநயம். அபிநயத்தோடு இசை தழுவிக் கதை நடத்தும் படிவடிவங்களை இக்கூத்துவகை என்று துணியலாம். நாடகம் என்கிற வார்த்தையை நமது வசதிக்காகத் தற்காலத்தில் Drama என்று பயன்படுத்துகிறோம். மேலும் நாடகம் என்ற ஒரு வடிவத்திற்கும் நமது மொழிக்கும் சம்பந்தமே கிடையாது.

-ஜெயகாந்தன்.

www.tamilarangam.net

நாங்கள் எழுத்தாளர்கள் அல்ல.

கலை, இலக்கியம் பற்றி பெரிதாக எதுவும் தெரியாது.

இலக்கணம்- நாங்கள் M.A., B.A. க்களும் இல்லை.

நாம் இலக்கிய ரசிகர்களுக்காகவோ அல்லது எங்களாலும் எழுதமுடியும், நாங்களும் எழுத்தாளர் என்ற எண்ணப் பாங்கிலோ எதுவும் எழுத முயற்சிக்கவில்லை.

எழுத்தை ஆன்பவனே எழுத்தாளன் என்று பலரும் கூறுகிறார்கள். இந்த எழுத்தை ஆளும் தந்திரம், பொய்யை நயமாக எழுதி உண்மையாக நம்பவைக்கும் கைங்கரியத்தையே பெரும்பாலும் செய்து வருகின்றது. அதே நேரத்தில் உண்மையைக்கூட நயமாகக் கூறினால் தான் பலராலும் நம்பமுடிகின்றது என்ற உண்மையும் மறுப்பதற்கில்லை.

இந்நிலையில் இயக்கப்பத்திரிகைகளும், மக்களுக்கு அன்னியமாகிப்போய் , சினிமா-செக்ஸ் ரசனைப் பத்திரிகைகளே படிக்கக் கிடைக்கின்ற பரிதாபநிலை தொடர்கையில்- நாம் அவர்களின் பொழுதுபோக்கை அல்லது இலக்கிய ரசனையைப் பூர்த்தி செய்வோம் என்று எதிர்பார்ப்பது பெரிதும் ஏமாற்றத்தையே தரும்.

எமது சமூகம் குறித்தும், அதன் முரண்பாடுகளிலிருந்தும் எமது உள்வாங்கலை நெறிபடுத்திக் கொள்வதே எமது நோக்கமாகும்.

சமூக பிரக்ஞை கொண்ட சக்திகளால் நாம் நெறிப்படுத்தப்படுவோம் என்னும் நம்பிக்கை எமக்குண்டு.

நடப்பிலிருந்து வருகின்ற எல்லாவற்றையுமே கேள்விக்குட்படுத்தவேண்டும்.

எதுவுமே செய்யாதிருப்போரால்தான் பிழைகள் விடாதிருக்கமுடியும்.

www.tamilarangam.net

# பேன் - உருவகக்கதை

சிறிது சிறிதாக வளர்ந்து இப்போது முழுவதும் பெருகிவிட்டது. ஒரேயடியாக அகற்றுவதற்கு ஒன்றில் மருந்து எடுக்க வேண்டும், அல்லது மயிரை ஒட்ட வழித்து விடவேண்டும். தரமான மருந்தைப் பெறுவது அவன் இயல்பிற்கு அப்பாற்பட்டது. தலையை முழுமையாக மொட்டை அடிப்பதென்றாலோ சாத்திரம், சம்பிரதாயம் அழகு போன்றவற்றை ஒதுக்கித் தள்ள முடியாமலுள்ளது. எல்லோரின் அழகையும் தலைமயிர்தான் தீர்மானிப்பதாக சில காலங்களாகவே அவன் கருதி வந்திருக்கிறான். அவனது "சிகை அலங்கரிப்பாளர்" கூட அவனை காணும்போது அவனது தலைமயிர் அழகை புகழ்ந்துரைக்காத நாளே கிடையாது. இவனும் தன் "மயிரைத்" தவிர வேறு வார்த்தை அவரிடம் பேசியது கிடையாது. ஈப்பித்தலையுடன் அவரிடம் போவதற்கு மனது சங்கடப்படுத்தியது.

மருந்து ஒரேயடியாக பேனை அழித்துவிடும் என்று அவன் நம்பிவிடவில்லை. போறதுபோற் போய் மறுபடியும் வந்துவிட்டால் மீண்டும் மருந்துக்கு அலைந்து....

மருந்து எடுக்கும் எண்ணத்தை கைவிட்டுவிட்டான்.

கடியும் கூடிவிட்டது தலைமயிரைத்தான் வழிக்கலாம், தலையை வெட்ட யோசிக்கின்ற அல்லது வெட்டுகின்ற நவீன மனிதன் அல்ல அவன்.

வேதனையுடன் தலையைச் சொறிந்து தொப்பியுடன் புறப்பட்டுவிட்டான் வேற்று ஊருக்கு.

முகம் தெரியாத இடத்தில் முகம் தெரியாத மனிதரிடம் தலையை அழகாக வழிக்கலாம் என்று

www.tamilarangam.net



# காலை வந்த கடிதம்

முன்னரைப் போலவே
இங்கு எல்லாம்
அப்படியேதான் இருக்கின்றது.

எல்லாம் மாறுகின்றது என்றவர்கள்
எதற்காகக் கூறுகிறார்கள்
என்பதை நீங்கள் அறியாததல்ல.

ஆறுதலுக்காக எல்லாமே
அடுத்தகைகளுக்கு மாற்றப்படுகிறது.

நீங்களும் நானும் இணைந்திருந்த
அந்த வீடு இப்போது இல்லை.

மாரி முடிந்து போய்ப் பார்த்தேன்.
மண்திட்டி கூட மழைக்கு இறுகிவிட்டது.

உங்கள் நம்பிக்கையுடன்
குமித்திருந்த புளியஞ்சருகும்
கரைந்து போனதால்- ஆச்சி
சிறிது நேரம் என்னையே பார்த்தபடி....

எதையுமே ஜீரணிக்க முடியவில்லை.
வலிமையிழந்த
அந்தக் கைகளில்
ஈக்கட்டு இருக்கின்றது
-துப்பரவாக்குவதற்காக

நாங்கள் எல்லாவற்றையுமே இழந்து.....

நீங்கள் விட்டுச்சென்ற
பழைய சாரத்தைச் சுத்திக்கட்டியபடி
கிழவி திரும்பவும்
புளியஞ் சருகை
................
என்னால் எதையுமே எழுதமுடியவில்லை.

சுகன்

www.tamilarangam.net



# இலங்கை அரசிற்கும் புலிகளிற்குமான ஒப்பந்தம்

மேற்குறிப்பிட்ட விடயம்பற்றி ஆராய முற்படுகையில் ஒப்பந்தம் பற்றி புறம்போக்கான பார்வையையோ அன்றி ஒப்பந்தத்தின் தீர்வுகளையே அப்படியே ஒப்புவிப்பதல்ல இக்கட்டுரையின் நோக்கம். இந்த ஒப்பந்தம் பற்றி அரசு-புலிகள், மக்களின் கண்களில் மண்தூவும் செய்திகளையும் கருத்துக்களையும் ஒருபுறத்தில் வைத்துக்கொண்டு, இந்த ஒப்பந்தத்தின் சூட்சுமம் என்ன என்பதை ஆராய்வதன்மூலமே உண்மையை விளங்கிக்கொள்ளமுடியும்.

1944ம் ஆண்டில் முதன்முதலாக ஜே.ஆர் இனால் சிங்களம் மட்டும் அரசகரும மொழியாக்கப்பட வேண்டும் என்ற பாராளுமன்ற உரை இனமுரண்பாட்டைக் கூர்மைப்படுத்தியது. அதன் நகர்வு-வளர்ச்சி 83ம் ஆண்டின் பின்னர் உயர்படியை எய்தியது. இம்முரண்பாட்டின் கூர்மையான அண்மைக்கால பகுதிகளில் அதிக ஆளுமை செலுத்தி அரசாங்கத்தை மட்டுமல்லாமல் சிங்கள மக்களையும் எதிர்த்துப் போராடிய புலிகளுக்கும், இந்த இயக்கங்களை இராணுவ ரீதியில் அழிப்பதன் மூலம் தமது அரசையும் இம்முரண்பாட்டையும் அப்படியே பேணிக்கொள்ள முனைந்த அரசும் ஒப்பந்தம் செய்து கைகோர்க்கிறதென்றால், இதனை வெறுமனே ஒரு சாதாரண தந்திரோபய நிகழ்வாகக் கருதமுடியாது. இந்த நிகழ்விற்கான காரணகாரியங்களை ஆய்வு செய்வதாயின்: இனமுரண்பாடு என்பது இந்த முதலாளித்துவ அமைப்பிற்கு எவ்வாறு சேவகம் செய்கின்றது என்பதையும் இதுவிடயத்தில் புலிகளினதும் அரசினதும் செயற்பாடுகளும் நிலைகளும் என்ன தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பது பற்றியும் சரியான பார்வையைச் செலுத்த வேண்டியது அவசியமாகின்றது.

www.tamilarangam.net



முதலாளித்துவ சமுக அமைப்பானது பெருந்தொகையான பாட்டாளிகளை உருவாக்குகின்றது. சுரண்டலுக்கான போட்டி- சிறு முதலாளிகளை பெரு முதலாளிகள் விழுங்கிக் கொள்வது- தேசிய தொழிற்துறை வளர்ச்சிகளை முடக்கி விடுவதுமல்லாமல், மேலும் பெருந்தொகையான உழைப்பாளிகளை அநாதரவாக்கும் வகையில் ஏகாதிபத்தியத்தின் தொழில்நுட்ப இயந்திரங்கள்- இன்னும் பலவாறானதும் சேர்ந்து தொழிற்படுகின்றன. இந்த உழைப்பாளிகளின் (பாட்டாளி உற்பத்தியின்) வளரச்சியானது தவிர்க்க முடியாதபடி வாழ்விற்கான போராட்டமாக உருவெடுக்கையில், முதலாளித்துவ அமைப்பு முறைக்கு எதிரான பலம்மிக்க அமைப்பு வடிவமாக மாறவும் செய்கிறது. சுரண்டல் அமைப்பின் மையப் பொருளான இந்த முரண்பாடும், இதன் அடிப்படையில் எழும் இணக்கம் காணமுடியாத இரு அமைப்புகளும் (அரச நிர்வாக அமைப்பும், அதனை உடைக்க முயலும் பாட்டாளித்துவ அமைப்பும்) சமுகத்தை முன்நோக்கி நகர்த்துவதுடன் முதலாளித்துவ அமைப்பை முடிவிற்குக் கொண்டுவந்து சோசலிச சமுகத்தில் பிரவேசிக்கச் செய்துவிடுகின்றது. இந்த நிலைமைகளை முன்கூட்டியே தெரிந்துகொள்ளும் முதலாளித்துவம்- திட்டமிட்ட வகையில் பாட்டாளி வர்க்கம் அமைப்பு வடிவம் பெறாதவகையில் அதற்குள் வேறுபல முரண்பாடுகளைத் தோற்றுவித்து அந்த முரண்பாடுகளைக் கூர்மையாக்கி வளர்த்தெடுப்பதில் அதிக அக்கறை காட்டுகிறது.இப்படி முரண்பாடுகளை வளர்த்தெடுப்பதன்முலம் பாட்டாளி வர்க்க சக்திகளை அமைப்பு வடிவம் பெறவிடாமல் முதலாளித்துவ அமைப்பைப் பாதுகாக்கின்றது. இதன் அடிப்படையில்தான் இலங்கையில் இனமுரண்பாடும் உருவாக்கப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்டதுமாகும்.

ஏற்கனவே வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வரும்போது, அரசினால் திட்டமிட்டு உருவாக்கி வளர்க்கப்பட்ட முரண்பாடுகளான கிறீஸ்தவ எதிர்ப்பியக்கம், மலையாளத் தொழிலாளர்களை வேலைநீக்கி

www.tamilarangam.net



இந்தியாவிற்கு திருப்பி அனுப்பும் நடவடிக்கைகள், முஸ்லிம் மக்களுக்கு எதிரான நடவடிக்கை, இந்திய வம்சாவழியினரை இந்தியாவிற்கு அனுப்புதல் என்பனவாகும் மேற்குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் இனமுரண்பாடின்றி சிங்கள, தமிழ் மக்கள் இவற்றிற்கெதிரான போராட்டங்களில் இணைந்து பங்கேற்றனர்.

மேற்குறிப்பிட்ட முரண்பாடுகள் ஒவ்வொன்றாகத் தொடக்கப்படுவதும் அது உயர்நிலை அடைந்தவுடன் அடக்கப்பட்டு, மறுமுரண்பாடு தோற்றங்காணுவதாகவும் இலங்கையின் அரசியல் வரலாறு இனங்காட்டுகிறது. இதன் தொடர் அங்கமாக தமிழ், சிங்கள முரண்பாடுகள் திட்டமிட்டவகையில் யூ.என்.பி யினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இப்பிரச்சனையைப் போட்டிபோட்டுக் கொண்டு வளர்ப்பதில் சிங்கள-தமிழ் முதலாளித்துவ தலைமைகள் மிகவும் அக்கறைகாட்டின. நாளடைவில் இடதுசாரி அமைப்புகளும் இந்த வலையில் சிக்கிக்கொண்டன.

இங்கே கவனிக்கபபடவேண்டியது என்னவெனில் இனமுரண்பாடு என்பது திட்டமிட்டவகையில் வர்க்கப் போராட்டத்தை அழித்தொழிப்பதற்காகவே நடாத்தப்படுவது என்பதாகும். இது எவ்வளவு தூரம் வலிமை பெறுகின்றதோ, இனமுரண்பாடு எவ்வளவு கூர்மையடைகின்றதோ அவ்வளவிற்கு முதலாளித்துவத்திற்கு நன்மை பயக்கின்றது. இங்கே அரசு- விடுதலை இயக்கங்கள் இனப்பகை அடிப்படையில் இணக்கங் காணமுடியாத எதிரிகள்ப்போல் மக்கள் மத்தியில் காட்டிக்கொண்டாலும் இந்த இனமுரண்பாட்டை வளர்ப்பதில்- தலைமை கொடுப்பதில் இவர்கள் நண்பர்களே.

இந்தவகையில் தமிழ்மக்கள் மத்தியில் இனமுரண்பாட்டை உணர்வு பூர்வமாக வளர்த்து முதலாளித்துவ அமைப்பிற்கு சேவகம் செய்த தமிழ் காங்கிரஸ்- தமிழரசு- இதன் வழியே வளர்ச்சியடைந்த நிலையில் இன்றைய அமைப்புகள் ஆகும். இன்றைய அமைப்புகளுள் இனமுரண்பாட்டின் தன்மையிலான போராட்டத்தில் அதிக ஆதிக்கம் செலுத்தியது புலிகளே. மேற்குறித்த வகையில் பெருந் தேசியவாத

www.tamilarangam.net



முதலாளித்துவ தலைமைகளின் இத்தந்திரோபாயத்தை மிகவும் திறமையாக வளர்க்க உதவி அரசிற்கு மிகவும் நம்பிக்கையான வர்க்கத் தன்மைகளை கொண்டவர்கள்புலிகள் தான்.

இந்த அடிப்படையை வைத்துக்கொண்டு அரசினதும் புலிகளினதும் தற்போதைய நிலைகளை ஆய்வு செய்வது மிகவும் பொருத்தமானதாகும். ஆயினும் அரசையும் அவ்வரசின் கீழுள்ள அமைப்புகளையும் மிகவும் முனைப்புடன் பயன்படுத்திக்கொள்ளும் ஏகாதிபத்திய நாடுகளின் தன்மைகளையும் அவை எப்படி இயங்குகின்றன என்பதையும் கவனிக்கவேண்டியது அவசியமாகின்றது. ஏனெனில் அரசோ மற்றும் புலிகள் உட்பட ஏனைய அமைப்புகளோ சுயமாக எந்தவொரு தீர்விற்கோ, நகர்விற்கோ வரமுடியாதபடி ஏகாதபத்தியத்தின் பிடியில் சிக்கி விடுகின்றன. இதற்கு அவ்வமைப்புகளின் வர்க்கத்தன்மையும் முக்கியமான காரணமாகும்.

இந்த நிலையில் இலங்கையை எடுத்துக்கொண்டால் இந்நாட்டின் உள்முரண்பாடுகளை- அதில் அரசின் செயற்பாடுகளையும் மறுபுறம் மக்கள் மத்தியில் எழும் இயக்கங்களையும் இந்நிதிநிறுவன அமைப்புகளே கையாள்கின்றன. அரசின் செயற்பாடுகள் எனும்போது கல்வித்திட்டங்களில் இருந்து தேசிய உற்பத்திகள், ஏற்றுமதி இறக்குமதிகள் முக்கியமாக வெளிவிவகார உறவுகள் குறித்தும் இந்நிதிநிறுவனங்களே தீர்மானிக்கின்றன. இங்கே நாம் விளங்கிக்கொள்வது வல்லரசுநாடுகளின் பிரதிநிதிகள் உதவி என்ற போர்வையில் நிதிமூலதனத்தில் அரசைத் தமது ஆளுமையின் கீழ்வைத்து விடுகின்றார்கள். அதற்கூடாக தமது நலன்களிற்கு ஏற்ப அந்த நாட்டைப் பயன்படுத்துகிறார்கள் என்பதாகும். இந்த சமுகங்களில் எழும் முரண்பாடுகள் குறித்து தோன்றும் இயக்கங்களையும் அவை சுயாதீனமாக மக்களில் தங்கியிருக்காத வகையில் ஏஜென்சுகளை நிறுத்தி நிதியையும் ஆயுத தளவாடங்களையும் கொடுத்து அமைப்புகளை வீங்கவைத்து இறுதியில்

தொடர்ச்சி - 38ம் பக்கத்தில்

www.tamilarangam.net



# பிரண்டல்

- நிமால்

ஐந்து நாள் இரவு கொள்ளையிடப்பட்ட
பிரேதம் இன்று விசாரணை நடக்கிறது.
வாதங்கள் முன்னூறாம் கட்டப்பட்ட இருவரு
டன் அக்கக்குடு வெளியேற தாய்மார்
களின் விசாரணையும் தொடர்கிறது.
ஒரு நம்பிக்கையோடுதான் அவர்கள்
விவாதிக்கிறார்கள். ஆதலால்தான்
விவாதம் தொடர்கிறது. இல்லையேல்
எப்போதோ கலைந்திருப்பார்கள்.
நம்பிக்கையுடன் தொடர்கின்ற விவாதம்
அவர்கள் நிச்சயம் வெற்றி பெறுவார்கள்!

"அறுக்க ஒன்றுமில்லையென்று
சவங்களுக்கு தாலிக்கொடுதான்
கிடைச்சதாக்கும்...."

www.tamilarangam.net



" ஆத்தைமார் வேசையாடி
அவங்களைப் பெத்தது போலே
வேசையாடித்தான் வாழ்ந்து
வளையாகிடும் ....."

அவன் அவ்விடம் விட்டகன்றான்
சந்திக்கு வந்தான். நண்பன் சொன்னான்

" கொண்டு போறாங்கள்
இன்றைக்கு ஆக்களைத் தட்டு
வாங்கள் "

" ------------------ "

"நீ சாதியிலை இருந்து வந்தனி.
உனக்கு இச்சந்தையில்
நேச்சர், நிலைமை ஒன்றும்
விளங்காது. இல்லையென்டாப்பார்
அவங்களைக் கட்டாயம் தட்டுவாங்கள்!"

" ------------------------ "

" நான் சொல்ல நீ நம்புற
யில்லைப் போல கிடக்கு
நம்பாவிட்டா 'வெறு' பிடி
சாப்பை (கல்) விழுந்தால்
தட்டுவாங்கள் சரியோ....."

வலதுகைப் பெருவிரலில் நாணயத்தைச்
சுண்டி இடதுகை மணிக்கட்டில்
அமர்த்தியவாறே கேட்டான்

" குருசோ... சாப்பையோ...? "

" ................................ "

" எப்பிடியும் நீ ஒரு முடிவுக்கு
வரத்தான் வேணும் "

" ..... இந்தப் பிரச்சனைக்காக
பந்தயம் வைக்கிறதை என்னால
ஏற்கேலாது. இந்தப் பிரச்சனையின்

www.tamilarangam.net



தீர்வு எனது நம்பிக்கையில்
பிறக்கையில்லை. நம்பிக்கையை
விட அதிக உறுதியோட
இதின்ர முடிவைக் கணிப்பதால்
நான் எனக்கு உன்ர பந்தயம்
வேடிக்கையாக் கிடக்கு,
நீ இந்தப் பிரச்சினையை முழுக்க
புரிந்து கொள்ளாமை இருக்கிறது
நான் உன்னை இந்த முயற்சிக்கு
தூண்டுது"

* * *

இருவரும் தொடர்ந்து நடக்கின்றனர்.

*———*

ஒருவன் : என்னடா கொண்டையைப் பிடிச்சுக்கொண்டு இருக்கிறாய்..?

மற்றவன் : அவன் இன்னை வந்து பட்டம் எழுதின கேள்வி எங்கண்ட குடும்பத்தையே கொண்டுபோட்டான். இப்ப நான் உண்மையாவே பிரச்சினையில வந்திருக்கிறேன் என்ன செய்யிறதென்டு தெரியவில்லை...!

ஒருவன் : ...? ....? ....?

கடாரன்

www.tamilarangam.net



நீ
உடுத்த பட்டுக் கூறையிலும்
இவனது
மாமிசத் தொகுதியின்
ஊன் மணம்.
இவனது
பட்டு வேட்டியிலும்
பலகோடி நிமிடங்கள்
பட்டினி கிடந்து
உழைத்துச் செத்த
பிணங்களின் வாடை
இவன்
விந்துப்பையில் நிரம்பிய
மில்லியன் உயிர்விந்துகளை
செலவிடவும்
யாதாயினும் ஒரு முளையத்தை
கருப்பையிலே
நெரித்துக் கொன்று
சொத்துக்களைப் பாதுகாக்கவும்
நீயும்,
இதுதான் வாழ்வு என்று
சந்ததியை
சேற்றில் தள்ளி உதைத்து விட்டு
வாசல்படி மிதிக்கப் போவதை
கரங்கள் தடுக்குமா?

மணிவண்ணன்.

www.tamilarangam.net



## மேற்கு ஜேர்மனியில், மகளிர் விடுதலையை நோக்கி......!

நிருபா
கல்யாணி
உமா
ரஞ்சனி
மல்லிகா
மங்கையர்க்கரசி
தேவிகா
சுகந்தி

– இவர்கள் அனைவரும் சொந்தப் பெயரில் எழுதும், சமூக அவலங்களை விமர்சிக்கும் பெண் எழுத்தாளர்களும் ஆய்வாளர்களுமாவர்.

15 ற்கு மேற்பட்ட தமிழ் சஞ்சிகைகள் வெளிவரும் மே. ஜேர்மனியில் இவர்களது கடும் உழைப்பில்தான் உண்மையில் இச் சஞ்சிகைகள் பிரசவிக்கின்றன. ஒவ்வொரு சஞ்சிகைகளும் வெளிவரும்போது

www.tamilarangam.net



இவர்களின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. உலகத்தைப் படைத்தது போன்ற பெரு மகிழ்ச்சியில் இவர்கள் அன்று இருப்பதை நான் அருகில் இருந்தே உணர்ந்திருக்கிறேன்.

இவர்களில் பலர் இச்சஞ்சிகைகளின் ஆசிரியர் குழுக்களில் அங்கம் வகிக்கிறார்கள். சஞ்சிகைகள் மட்டத்தில் கருத்து முரண்பாடுகள் இருப்பினும். சில சமயம் மிகவும் கடுமையாகவும் கூர்மையாகவும் இருப்பினும் இம் முரண்பாடுகளில் இருந்தும் இவர்கள் கற்று வருகிறார்கள்.

கற்றலும் கற்பித்தலும் எனும் நோக்கோடு இவர்கள் அதிகமாகக் கற்கிறார்கள். இயலுமானவரை எழுதுகிறார்கள்.

இவர்கள் எழுத்துக்களில் போலித்தனமோ பாசாங்கோ இல்லை. கொண்ட கருத்துக்களில் சரியோ, தவறோ அசைக்கமுடியாத நம்பிக்கையுடன்

www.tamilarangam.net



எழுதுவது இவர்கள் அனைவரிடமும் காணக் கூடிய பொது உண்மையாகும்.

இவர்கள் வளர்ச்சிக்கு இவர்களைச் சூழவுள்ள தோழர்களின் தாக்கமும், கலந்துரையாடல், நெறிப்படுத்தல் என்ற நிலைகளும் உறுதுணையாக இருக்கின்றன. இச் சஞ்சிகைகளில் இவர்களது கருத்து நிலைகளை மாற்றிய எழுத்தாளர்கள் எவ்வகையிலும் ஆதிக்கம் செலுத்தாது நெறிப்படுத்தி வருவது வரவேற்புக்குரியது. இவ்வகையில் அச் சஞ்சிகைகள் பெருமைக்குரியன.

இதே நேரத்தில் வியாபாரக் கவர்ச்சிக்காக பத்திரிகைகளில் பெண்களின் பெயர்களை விரும்பும் சஞ்சிகையாளர்கள், அவர்களின் கருத்துக்கள் எதுவாக இருந்தாலும் அதைக் கவனத்தில் எடுக்காது, பெண் எழுத்தாளர்களது வீழ்ச்சி நோக்கையும், பெண் எழுத்தாளர்களது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆதங்கங்களையும், வியாபாரம் புரியும்
சந்தைகளைப் போல் செயற்படாது,
போராட்ட எழுத்தாளர்களது சஞ்சிகைகள்
தொடர்ந்தும் இருந்துவர வேண்டியது
முக்கியமானதாகும்.

வாசகர்களும் பொறுமையுடனும் உரிமை
யுடனும் இவர்கள் படைப்புக்களை
விமர்சிக்கிறார்கள். ஒரு தோழியின் ஆக்க
த்தை இன்னொரு தோழியர் அறியும்போது
அவர் எவ்வளவு தொலைவில் இருந்தாலும்
தொலைபேசி மூலமோ அன்றேல் கடிதமூலமோ
உடன் தொடர்பு கொண்டு பாராட்டத்
தவறுவதில்லை. மேலதிக விளக்கமோ
அவ் வாக்கம் பற்றிய தங்களின் கருத்தை
யோ முன் வைக்கத் தவறுவதில்லை.
எல்லோருக்காகவும் எல்லோரும் என
இவர்கள் ஒருவருக்கொருவர் மிகவும்
ஆதரவாக இருந்து வருகிறார்கள்.

www.tamilarangam.net



பல்வேறு தளங்களிலும் செயற்படுகிறார்கள்.

கவிதை, கட்டுரை, சிறுகதை, விமர்சனம், ஆசிரியர் தலையங்கம் போன்ற தீரு கல்வி புகட்டுதல் என பல்வேறு தளங்களிலும் இவர்கள் இந்தள விரிவடைந்து வருகின்றது. எழுத்துத் துறையில் மட்டுமல்லாது முக்கியமான நிகழ்வுகளுக்கு தலைமைத்துவம் அளிப்பதுவரை தங்கள் ஆளுமையை இன்று வளர்த்துக்கொண்டு வருகிறார்கள்.

இக் கட்டுரையில் மே. ஜேர்மனி தவிர்ந்த ஏனைய நாடுகளில் இயங்கும் மகளிர் விருத்தி அமைப்புக்களோ 'அல்லது' எழுத்தாளர்களோ உள்ளடக்கவில்லை. மே. ஜேர்மனியிலும் 'எழுத்துக்களில் எனக்குப் பரிச்சயமான பெண்களையே இதில் சுட்டிக்காட்டியுள்ளேன்.

www.tamilarangam.net



மேற்கு ஜேர்மனியில் இவர்களைத்தவிர இன்னும் பல தோழர்கள் சமூக உணர்வுடன் விடுதலை நோக்கி இயங்கி வருகின்றார்கள். இவர்களையும் உள்ளடக்காமல் இக் கட்டுரை முழுமைபெறாது.

இத் தோழர்களின் வளர்ச்சி எதிர்காலத்தில் இவர்களுக்கான விடுதலை என்பதைத் தரப்போவது நிச்சயம்.

— சாகன்.

மேற்கு ஜேர்மனியில் இயங்கும் "தமிழ் மகளிர் மன்றம்" 'ஸ்ருட்காட்' நகரிலுள்ள நூல் நிலையமொன்றில் தமிழ்ப் பிரிவு ஒன்றை ஆரம்பித்துள்ளது

முகவரி : BIBLIOTHEK,
INSTITUT FÜR AUSLANDZIEHUNGEN,
CHARLOTTEN PLATZ 17,
7000 STUTTGART 1,
WEST GERMANY.

www.tamilarangam.net



சிறுகதை

# வெளிச்சத்தை வென்றுவிட்டாள்.

ஆ.ஆறுமுகம்

வழிந்து விழுவது போல் வாயிலில் பெருத்த கூட்டம். ஆறு மணிக்கு நிகழ்ச்சி ஆரம்பம். ஆயினும் இன்னும் நிகழ்ச்சி ஆரம்பமாகவில்லை என்று எட்டத்தில் வருகின்ற போதே தெரிந்தது. மண்டப வாயிலில நின்ற இரு பெண்கள் சந்தனக்கும்பாவை நீட்டினர். தொட்டுப் பொட்டு வைத்த நந்தனுக்கு அவர்கள் கலாச்சாரமாய் நின்றார்களா? மங்களகரமாய் நின்றார்களா? என்ற கேள்வி மின்னி மறைந்தது.

உள்ளே நுழைந்த நந்தன் வெற்றுக் கதிரைகளைத் தேடியபடியே கூடவந்த தங்கை சங்கரியை நோக்கினான். சங்கரி சந்தனத்தைத் தொட்டு உள்ளங்கைகளினுள் ஒளித்துக்கொண்டாள். அவள் அணிந்திருந்த பச்சைப் பஞ்சாபிக்குப் பொருத்தமாக வைத்த பச்சைப்பொட்டு அவள் அழகுக்கு மேலும் அழகு சேர்த்தது போலும்.

இத்தனை இரைச்சலுக்கும் நடுவே சங்கரி, சங்கரி என குதூகலித்து காஞ்சிபுரத்தை சரசரக்க விட்ட இன்னொரு பெண் சங்கரியின் கைகளினுள் கைகலந்தாள்.

நீண்டநாள் தோழிகளாம், ஆனந்தியாம், சங்கரியின் கணவர், நந்தனுக்கு அறிமுகம் செய்தார்.

எட்ட நின்றே வணக்கம் சொன்ன ஆனந்தி, சங்கரியைத் தன் இருக்கையருகே அமர்த்திக் கொண்டாள். நிறைய இருக்கைகள் இருந்தன. பெரும்பாலானவர்கள் பல நண்பர்களையும் சந்தித்துக் கொள்வது இத்தகைய நிகழ்ச்சிகளில் தானே என்பதை உறுதி செய்தபடி பலரும் கூட்டம் கூட்டமாக நின்றபடி குசலம் விசாரித்துக்கொண்டு இருந்தனர். ஆனந்தியும் சேர்த்து வைத்த எல்லாத்தையும் அளந்து கொண்டே இருந்தாள்.

www.tamilarangam.net



மேடையின் இரு பக்கத்திலும் இரண்டு T.V க்கள் இயங்கிக் கொண்டிருக்க வீடியோ படப்பிடிப்பாளர்கள் தம் தயாரிப்பு வேலைகளைத் துரிதமாகச் செய்து கொண்டிருந்தனர். மேடையில் மங்கல மேசையைச் சுற்றி அழகான கதிரைகள் அடுக்கப்பட்டிருந்தன. பின்னே மேடையின் நடுப்பக்கத்தில் பெரிய திரைச் சேலையில் "கலைவிழா, பாரீஸ் தமிழ்ச் சங்கம்" என அழகாக எழுதப்பட்டிருந்தது.

தலைவர் மூன்று, நான்கு தடவைகள் ஒலிபெருக்கி முன் தோன்றி தயவு பண்ணி மறைந்த பின்னர் தான் இருக்கைகள் நிறைந்தன.

தலைவர் பேசிக்கொண்டிருந்தார். கடந்த ஆண்டு செயல் திட்டங்கள், செய்யப்படவேண்டிய திட்டங்கள் பற்றி எல்லாம் நிறையப் பேசினார். அதை சிறிதும் சட்டை செய்யாமல் ஆனந்தி தொணதொணத்துக் கொண்டிருந்தாள்.

சற்றுத் தள்ளியிருந்து தலைவரின் உரையைக் கேட்கவேண்டும் போல் நந்தனுக்குத் தோன்றியது. ஆயினும் அதற்கான உண்மையான காரணத்தைச் சொல்லப் போய் நிகழ்ச்சியையே பார்க்க முடியாமற் போய்விடுமோ என்ற பயத்தில் வில்லங்கப்பட்டே கதிரையில் தன்னை இருத்திக்கொண்டான்.

"நீ இன்றைக்கு வருவாயென்று நான் எதிர்பார்க்கவேயில்லையடி", ஆனந்தி ஆச்சரியத்தை வெளிப்படுத்திக்கொண்டாள்.

"ஏனடி நான் நிகழ்ச்சிகளைப் பார்க்கக்கூடாதோ?" சங்கரி பதிலைக் கேள்வியாகத் தொடுத்தாள்.

"இல்லையடி, இன்றைக்கு வெளியடுகின்ற ஆண்டு மலரிலை உன்ரை கதையும் வருகுது. பப்ளிக்கிலை உன்ரை முகத்தைக் காட்டக்கூடாதென்று முந்தி "தரணி" பத்திரிகை வெளியீட்டு விழாவுக்கே வராமல் விட்டனி. அதுதான்....." ஆனந்தி தன் அபிப்பிராயத்தைத் தெரிவித்தாள்.

www.tamilarangam.net



"முந்தி அப்படித்தான் நினைச்சன். இப்ப இப்படி நினைக்கிறன். என்னடி நான் மாறக் கூடாதா?" என்ற கேள்வியுடன் சங்கரி, கதைக்கு முற்றுப்புள்ளி வைத்தாள்.

தலைவர் பேசிக்கொண்டேயிருந்தார். நந்தன் தலைவரைப் பார்த்தபடியே இருந்தாலும் காதுகள் ஆனந்தி சங்கரி சம்பாஷனையையே உள்வாங்கிக் கொண்டு இருந்தது.

சங்கரியின் கதை ஆண்டு மலரில் வெளியாகின்றது என்பதை அறிந்தபோது நந்தனுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. அவனுக்கு உடனே அவளின் எழுத்தைப் படிக்கவேண்டும் போல் மனது பரபரத்தது.

சங்கரியும் ஆறேழு வருடங்களாகக் கதை எழுதுகின்றாள். அவள் கதைகள் மட்டுமல்ல, கவிதை கூட எழுதுவாள். அவளின் எழுத்தில் ஒரு துருதுருப்பு இல்லாவிட்டாலும் ஓர் அமைதியும் அடக்கமும் இருக்கும். இன்னும் அவளின் கதைகளில் எளிமை, ஏழ்மையின் பாத்திரங்கள். அதன் தாய்மையுணர்வுகள்..... உடனே தங்கையின் கதையைத் தரிசிக்க வேண்டும் போல் இருந்தது.

மேடையிலே யார்யாரோ மாறிமாறிப் பேசிக் கொண்டிருந்தனர். தமிழ்ச்சங்கம் என்பதாலோ என்னவோ தமிழன் பெருமைப் பற்றி ஒவ்வொரு பேச்சாளரும் பீற்றிக் கொண்டிருந்தனர். இது ஒருவகையில் நந்தனுக்கு போராகத்தான் இருந்தது.

வீடியோ படப்பிடிப்பாளர், தங்கள் தொழில் உத்தி விளையாட்டுகளை T.V.யில் காட்டிக்கொண்டு இருந்தனர். பெரும்பாலனவர்கள் மேடையைவிட T.V. யையே அதிகம் கவனித்துக் கொண்டிருந்தனர். மேடையைப் பார்ப்பதைவிட T.V. யைப் பார்ப்பதில் அதிக ரசனை இருக்கின்றது போலும். எல்லாமே ஒரே ஸ்ருடியோ மயம். இப்போது நிகழ்ச்சிகள் எல்லாமே வீடியோ கசற் தயாரிப்பதற்காகவே நடத்தப்படுகின்றது. அதனால் நிகழ்ச்சி மண்டபத்தையே ஒரு ஸ்ருடியோ ஆக்கிவிடுகின்றார்களோ என்று நந்தனுக்கு தோன்றியது.

www.tamilarangam.net



வீடியோ படப்பிடிப்பாளரின் அந்தக் கண்ணைக்கூசும்படியான அதீத ஒளி, கண்களை நோகவைத்து தலையிடியை ஏற்படுத்தியது. இனிமேல் நிகழ்ச்சிகளிற்கு வரும்போது கூலிங்கிளாஸ் கொண்டுவரவேண்டியதுதான். நந்தன் தனக்குள் குமைந்து கொண்டபடி முள்ளின்மேல் அமர்ந்திருந்தான்

இப்போதெல்லாம் எதிலுமே இயற்கையை, ஒரு இயல்பைக் காணவே முடிவதில்லை என்ற ஆதங்கம் அவனை வருத்தியது. எழும்பி வெளியே போவோமா என்ற நினைப்பை, ஆண்டு மலரைப் பார்ப்போம் என்ற எண்ணம் தடை செய்தது. ஆண்டு மலரின் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தான்.

நந்தனின் நினைவு தங்கை சங்கரியின் கதை, கவிதைகளில் நடந்து சென்றது. அவளின் எல்லா எழுத்தையும் படித்த போதும், சங்கரியின் எழுத்து என்று நினைத்தவுடன் அந்த இரண்டு வரிகளும் அவன் நெஞ்சை நிரப்பும்.

பொய்கள், போலிகள் அனைத்தையுமே துவம்சம் செய்யும் யானை பலம் கொண்ட அந்த வரிகள்.

"உங்களுடைய கௌரவத்தைக் காப்பாற்ற வெளிக்கிட்டு வாழ்க்கையை அழிக்கிறீங்களே,
வாழ்க்கையைக் காப்பாற்றுவதற்காக உங்கள் கௌரவத்தை அழியுங்களேன்."

ஆம். அவை தாம் அந்த வரிகள்.நந்தனுக்கு நன்றாக நினைவிருக்கின்றது. அது 78ம் ஆண்டாகத்தான் இருக்கவேண்டும். அப்போதுதான் இவளுடன் படித்த "யோகா" செத்துப் போனாள். வேலைக்காரப் பெடியனுடன் தொடர்பெண்டு, வயிற்றிலை நாலுமாதமானப் பிறகு தான் தெரிந்தது, தாய்தேப்பன் அடிச்சுப்பொத்தி வயிறு கழுவவெண்டு வெளிக்கிட்டு.....

அந்தத் தாங்கமுடியாத சம்பவம் சங்கரியின் மனதைப் பிழிந்த போது பிரசவித்தது தான் அவளின் முதலாவது சிறுகதை. அந்தக்கதை "மருதம்" என்ற ஊர்க் கையேட்டுப் பத்திரிகையில் வந்தபோது தான்

www.tamilarangam.net



யோகாவின் தாய் வீட்டை வந்து கேட்டாள்.

"மானத்தைக் காப்பாற்றப் போய் அவளையே இழந்திட்டோம், பேந்துமேன் எங்களை றோட்டுக்கு இழுக்கின்றாய்" என்று.

விக்கி விக்கி அழுத சங்கரி வீறுடன் சொன்னாள், இனிமேல் இப்படியொரு சம்பவம் எங்கடை அயலட்டையிலை நடக்கவேகூடாது என்று. அவள் தொடர்ந்து அழுதழுது ஏதேதோ பேசினாள். அந்த ஆற்றோட்டத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாய் மிதந்த சில கஞ்சல்கள் மட்டுமே ஞாபகத்திற்கு வந்தன.

ஒன்று மட்டும் தெரிந்தது. சமுகத்தில் தோன்றும் அட்டூழியங்களைத் தாங்கமுடியாத நிலையில் அவற்றை அழிக்கவே அவளின் எழுத்தும் தோன்றியது என்று.

அலையடித்த சத்தம் கேட்டு நந்தன் ஒரு கணம் திடுக்குற்றான். இப்படி அடிக்கடி கடற்கரையில் இருந்தபடியே நந்தன் கனவில் வேறு இடத்திற்கெல்லாம் போய்விடுவதுண்டு. சுற்றுமுற்றும் பார்த்தான். நிமிடத்திற்கொருமுறை கரகோஷமும், ஆரவாரமும் பலமாக இருந்தது. தேர்தல் கூட்டத்தில் இருக்கின்றேனாஎன்ற சந்தேகம் அவன் மனதில் எழ மேடையை நோக்கி நிமிர்ந்தான். ஒரு பெரியவர் 2ம் நூற்றாண்டு மனிதனை 20ம் நூற்றாண்டில் சந்தித்த வீரக்கதையை சொட்டச் சொட்டச் கைதட்டுமாறு விட்டுக் கொண்டிருந்தார். நீண்ட நேரமாக சோர்ந்திருந்த வீர இளைஞர்கட்கு அப்பெரியவரின் பேச்சில் இருந்த வீரம் ஒரு புத்துணர்ச்சியைக் கொடுத்திருக்க வேண்டும். மண்டபம் முழுக்க ஒரே ஆரவாரமாய் இருந்தது.

இந்த ஆரவாரத்திலும் ஆனந்தியும் சங்கரியும் தங்கள் பேச்சைக் நிறுத்திக் கொள்ளவில்லை. இந்த ஆரவாரத்தைப் பயன்படுத்திக்கொண்டு சங்கரியின் கணவன் நந்தனுடன் பேச்சுத்தொடுத்தான். ஆண்டுமலரை எதிர்பார்த்தபடியே நந்தன் "பாக்" இல் இருந்து கதைப்பது போல் சந்தோஷமாகவிருந்தான்.

www.tamilarangam.net



நந்தன் வீட்டுக்கு வந்ததும் வராததுமாக அந்தப் புத்தகத்துடன் போய் அவளின் சிறுகதையைப் பிரித்தான்.

"நெருஞ்சி முள்"

அவன் மனதை நித்தமும் ஏதோ ஒரு சம்பவம் தைத்துக் கொண்டுதான் இருக்கின்றது. இந்த வேதனைகளில் இருந்து விடுபட அவனால் முடிவதும் இல்லை. நடுச்சாம நேரங்களில் விழித்திருந்து அவன் புத்தகங்கள் வாசிக்கும் போதெல்லாம், அந்தப் பெரிய குண்டை அங்கும் இங்கும் ஆட்டிக்கொண்டிருக்கும் அந்த சுவர் மணிக்கூடு அவனை வெருட்டிக்கொண்டேயிருக்கும். அப்போதெல்லாம் அவன் இருக்கை கொள்ளாது அந்த ஆடும் குண்டை எட்டி அறுத்துவிடுவோமா என்று துடிப்பான். இப்போதும் என்ன, பாய்ந்து போய் அந்த நெஞ்சில் ஆடும் தங்கப் பதக்கத்தை.....

நந்தன் சிறுகதைக்குள் மூழ்கின்றான். ஐந்து வருடங்களுக்கு முன்னர் தான் பிறந்து வளர்ந்த அந்தக் கிராமத்து செம்பாட்டுப் புழுதியை கிளறிக்கொண்டே போவது போலவும், அந்த மணியத்தாரின் கடையடியில் குறுக்குக்கட்டு மனிசியொன்று பொயிலையை விரிச்சு ஏதோ புறுபுறுத்துக்கொண்டு போவது போலவும் இருந்தது.

சங்கரி, அந்தக் கடையையும் மணியத்தாற்றை மேள் கமலத்தையும் இன்னும் மறக்கவேயில்லை. அந்தக் கடையை கதைக்கேற்ற மாதிரி, அப்படி இப்படி அடித்தளத்தையே இடிச்சு அழகாகத்தான் கதையில் பதித்திருக்கின்றாள்.

மணியத்தார் இன்னும் சாகவில்லை. பாரிசவாதமாய் படுக்கையில் விழுந்துவிட்டார். கடையையும் நடத்த கண்ட கிண்ட பேர் எல்லாம் வருகுதெண்டு அதையும் பூட்டியாச்சாம். ஏதோ வளவுக்கை கிடக்கிற முருங்கையை வைச்சுத்தான் அந்த பெட்டையின்ரை சீவியம் போகுதெண்டு அம்மா கொஞ்சநாளைக்கு முன்னம் எழுதியிருந்தது நந்தனுக்கு ஞாபகம் வந்தது.

www.tamilarangam.net



இவள் கதைக்காக மணியத்தாரைக் கொன்று போட்டாள். சரி அதுதான் போகட்டும், அது அங்கை கிடந்து அல்லல்பட இவள் இங்கை வித்து கைதட்டலும் தங்கப்பதக்கமும் வேண்டினாள்.

சங்கரியின் முகத்திலை தான் எவ்வளவு சந்தோஷம். ஆனந்தக் கண்ணீர் துளிர் தெறிக்க எல்லாத்தையுமே மறந்து குதூகலிக்கின்றாள். இன்றைக்கு ஒரு கணம் தன்னும் அந்தக் கமலத்தை நினைத்திருப்பாளா?

நந்தனுக்கு மிகவும் வேதனையாகவிருந்தது. கமலத்தின் பிரச்சினையில் ஒரு துளி அக்கறையில்லாமல், அவர்களின் துன்ப உணர்வுகளையும் சூறையாடிப் புகழ் தேடுகிறார்கள். புகழிற்காக, தங்கப்பதக்கத்திற்காக இவ்வளவு கீழ்த்தரமான......

சங்கரியின் "நெருஞ்சி முள்" அவன் மனதில் ஆழமான காயத்தை உண்டு பண்ணியது. அந்தக் காயத்தின் வேதனையோடு அந்தச் சிறுகதையை மீண்டும் தொடர்ந்தான்.

மாவிடிக்க வாற பொன்னுக் கிழவியோடும்
வளவு கூட்டி உடுப்புத்தோய்க்க வாற
முத்தியோடும் இவள் நல்லாய்த்தான்
அளந்து இருக்கின்றாள். அவர்கள் கதைக்கிற
பாஷையிலை- அப்படியே மறக்காமல் கதையில்
பதித்திருக்கின்றாள்.அதாலைதான் எல்லோரும்
இவளை "இலக்கிய சங்கரி" என்று
அழைக்கின்றார்கள் போலும்.

இதுவரை காலமும் நடக்காத, நடப்பதற்கு சாத்தியமேயில்லாத வெறுமனே கற்பனையாக, கதைக்காகப் புனையப்பட்ட ஒரு சம்பவம் கொஞ்சம்கூட யதார்த்தமானதாகவில்லை. இதற்குப்போய் முதலாவது பரிசு. தங்கப்பதக்கம் வேறு.

நந்தனின் மனம் கொதித்தது. ஆலையில்லா ஊருக்கு இலுப்பம்பூச் சர்க்கரை மாதிரி. இவளின்ரை கதையொன்று தான் போட்டிக்கே போயிருக்குமோ என்னவோ? நந்தனுக்கு சந்தேகம்

www.tamilarangam.net



எழுந்தது. அதுதானே இந்தக் காலத்தில், போட்டிக்கும் பதக்கத்திற்கும் கதையெழுதிறவள் இவளை விடவேறு யார்தான் இருப்பாள். அவனுக்கு சலிப்பாகவும் வெறுப்பாகவும் இருந்தது.

யார்தான் இதைத் தெரிவு செய்திருப்பார்கள்? நிச்சயமாக ஒரு நல்ல எழுத்தாளன், விமர்சகன், அல்லது வாசகனாக இருக்கமுடியாது. யாராவது ஒரு M.A. அல்லது B.A.யாகத்தான் இருக்கும். எழுதியது தமிழ்தானா என்று பார்ப்பதற்கு இந்தப்பட்டம் போதாதா என்ன. கேள்விகளும் பதில்களுமான போராட்டம் அவன் மனதிற்குள் உக்கிரமாக நடந்து கொண்டிருந்தது.

தன் மனதிற்குள் நிகழ்ந்து கொண்டிருக்கும் போராட்டத்தை அப்படியே சங்கரிக்கு காட்டுவோமா என ஒரு கணம் நினைத்தான்.

சங்கரி குசினிக்குள் தன் கணவனிடம் இன்றைய நிகழ்ச்சி பற்றியே ஏதோ பிரஸ்தாபித்துக் கொண்டு இருந்தாள். அவள் பாதங்கள் அந்தரத்திலேயே நிற்கின்றன என்பதை அறிய இன்னும் என்ன வேண்டும். இன்றைய புகழ்ச்சியின் சந்தோஷ அலைகள் அவளின் ஒவ்வொருஉணர்ச்சிக் கலங்களிலும் நுரை தடவிக் கொண்டிருக்கின்றன என்பது தெட்டத்தெளிவாக விளங்கியது. இந்தநேரம் அவள் உண்மையின் உணர்ச்சித் துடிப்புகளை விளங்கிக்கொள்ளமுடியாது. மேசை மீதிருந்த கறுப்பு நோட்டுப்புத்தகம் அவன் கண்களை ஒரு கணம் வருடியது. இதயம் துன்பச் சேற்றுக்குள் அமிழ்ந்து போகின்ற போதெல்லாம், இந்த நோட்டுப்புத்தகம் தான் அவனை நிதானமாகத் தூக்கிவிட்டிருக்கின்றது.

எதாவது சுமைகள் அவன் நெஞ்சத்தை அரிக்கின்றபோது அவற்றையெல்லாம் அன்றே அந்த நோட்டுப் புத்தகத்தில் இறக்கிவைப்பது அவன் வழக்கம். அந்த நோட்டுப் புத்தகத்தை எட்டியெடுத்துப் பிரித்தான்.

www.tamilarangam.net



ஏதோ ஒரு பக்கம்.

நான்கு வருடங்களிற்கு முன்னர் இடப்பட்ட திகதி. இடையே ஒரு பந்தியைக் கண்கள் தொடர்ந்தன. சாண்டில்யன். எத்துணை குறும்புக்காரன். சிறுபிள்ளைகளை ஏமாற்றும் காக்கா கதைபோல், எத்தனை பெரியவர்களை, நாளைய பெரியவர்களையெல்லாம் ஏமாற்றிக்கொண்டிருக்கிறான். ஒரு பெண்ணின் இடையைப்பற்றி 30 பக்கங்களில் வர்ணப்பதிலேயே எத்தனை இளைஞர்களின் சிந்தனைகளையே சிறைவைத்து விட்டான்.

அத்துடன் அந்தப் பந்தி நின்றுவிட்டது. நந்தனின் சிந்தனை "நெருஞ்சி முள்"ளுடன் நீட்டிச்சென்றது. ஏதாவது எழுதலாம் என வெற்றுப்பக்கத்தைத் தேடிய நந்தன், சங்கரி வருவது கண்டு நிமிர்ந்தான்.

"எப்படியண்ணா, கதை தங்கப்பதக்கத்திற்குத் தகுதியானது தானே?"

நந்தனின் புகழ்ச்சிச் சொல்லைத் தாங்கிக் கொள்ள சங்கரியின் முகம் தயாராகவிருந்தது. இறுகிப்போயிருந்த தன் முகத்தை இலேசாக்கிக் கொண்டே நந்தன் சொன்னான்.

"தங்கப்பதக்கத்திற்கு மட்டுமென்ன,
இனி நீ கடை, உணவக திறப்பு
விழாக்களுக்குக்கூட *பேசப்* போகலாம்.
எல்லாத்துக்கும் நீ தகுதி பெற்றுவிட்டாய் சங்கரி"

தாங்க முடியாத வேதனை அவன் சிரிப்பில் உதிர்வது சங்கரிக்கு விளங்காமலில்லை. சங்கரியின் முகமும் இறுகியது. இருவருமே எதுவுமே பேசிக்கொள்ளவில்லை. இருவருக்குள்ளும் சமூகம், இலக்கியம் இரண்டுமே சண்டை போட்டுக் கொண்டிருந்தன.

* ——— *

www.tamilarangam.net





எமது மக்களின் நலனின் அடிப்படையில் இந்தியாவை முற்றுமுழுதாக எமது பிரச்சனைக்குள் ஈடுபடுத்துவதே எமது விருப்பம். இதற்குச் சாதகமாகவே இலங்கை அரசு தற்போது நடந்து கொள்கிறது.

எல்.கேதீஸ்வரன்.ஈ.பி.ஆர்.எல்.எப்.பேச்சாளர்

எமது மக்களின் நலனின் அடிப்படையில் இலங்கை அரசு நடந்து கொள்கிறது அப்படித்தானே!
அதுசரி' எமது பிரச்சனைக்குள் இன்னும் வேறையாரை ஈடுபடுத்திறதா உத்தேசம்?

* ———————— *

விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு ஓர் அரசியல் கட்சியாக மாறியுள்ளது._ செய்தி
சிறீலங்கா அரசுடன் எமது மக்களின் பிரச்சனைகள் குறித்துப் பேசிவருகின்றோம். இப்பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெறும்.

_ யோகி_ (புலிகளின் மக்கள் முன்னணி செயலாளர்)

இதுவரைக்கும் மக்களை' நெறிபிறழாத தோழர்களை' வர்க்க சக்திகளை அழித்தொழிக்கும் போராட்டம் கட்சி அந்தஸ்து பெற்றுள்ளது என்று நேரடியாகச் சொன்னா எங்களுக்கு விளங்காதா.... என்ன?

* ———————— *

இந்து மக்களுக்கு அவர்களின் பூசைப் பொருள்கள் இலகுவில் கிடைக்ககூடியதாக "பூசைப் பொருள் விற்பனை நிலையம்" விரைவில் அமையும்.

–இந்து கலாச்சார இராஜாங்க அமைச்சர் பி.பி.தேவராஜ்

தெருக்களில் திருநீறு தாராளமாகக் கிடைக்கின்றது. இயக்க மூர்த்திகளுக்கான பூசைப்பொருள்கள் எங்கு கிடைக்கும்?

www.tamilarangam.net



La nuit,
Je fermais les yeux.
Je voulais dormir tranquillement.
Les yeux sans sommeil.
Oh! les ombres de sang
De mes frères me mouillaient.
Je n'arrivais plus à dormir.
Je ne voulais plus dormir.
Je descendais dans la rue.
Je voulais marcher.
Je marchais.
C'était une nuit d'été.

Les étoiles versaient
Des larmes sur la Terre.
Je criais pour les Hommes
Qui naissaient pour vivre.
Ils se faisaient un beau monde.
Ils perdaient leur monde.
Ce monde est beau pour la classe de sou.
Et terrible pour la classe de misère.
Ils devenaient victimes d'une conspiration.
Je criais seul.
Les chiens me chassaient.
Je luttais en moi.
Mais je marchais sans sommeil.
C'était une nuit d'été.

Les ombres de sang
Et les ombres de larmes
Faisaient une misérable danse devant moi
Les larmes et le sang parlaient.

www.tamilarangam.net



**Ils disaient:**

*"L'Homme se réveillait avec la lutte.*
*On ne mourait pas pour rien.*
*On mourait pour un avenir*
*pour nos enfants.*
*L'Homme gagnera avec la lutte."*

**Ils disparaissaient.**
**Il faisait noir.**
**Je retournais seul.**
**C'était une nuit d'été.**

l'ombre de sang **kalamogan.**

அகதிகள் தகவல் சேகரிப்பு நிறுவனமான "DOCUMENTATION REFUGIES" தனது வெளியீடான "DOCUMENTATION REFUGIES" இல் சமீபத்தில் பிரசுரித்த க.கலாமோகனின் கவிதையொன்றின் தமிழாக்கத்தை இங்கு தந்துள்ளோம். நிறுவனம் ஏற்கனவே க.கலாமோகனின் பல கவிதைகளைப் பிரசுரித்துள்ளது என்பது குறிப்பிடததக்கதாகும். பிரஸ்தாப நிறுவனத்திற்கும், இக்கவிதையைத் தமிழில் மொழி பெயர்ப்புச் செய்த திரு.எல்.ஜேம்ஸிற்கும் நாம் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

www.tamilarangam.net



இரவு
நான் விழிகளை மூடினேன்
எனக்கோ அமைதியாகத் தூங்கவேண்டியிருந்தது.
தூக்கமற்ற விழிகள்
ஓ! எனது சகோதரர்களின்
இரத்த நிழல்கள் என்னை நனைத்தன.
என்னால் தூங்கவே முடியவில்லை
எனக்கோ தூக்கமும் வேண்டியதாகவில்லை.
நான் வீதியில் இறங்கினேன்.
எனக்கோ நடக்கவேண்டியிருந்தது.
நான் நடந்தேன்

அது ஒரு கோடையிரவாயிருந்தது.

நட்சத்திரங்கள் நிலத்தின் மீது
கண்ணீர்களைச் சிந்தின.
வாழப்பிறந்த மனிதர்களிற்காக
நான் அழுதேன்.
அவர்கள் ஒரு அழகிய உலகைச் செய்தார்கள்
அதனைத் தொலைத்தார்கள்.
ஒரு சதியின் கைதிகளானார்கள்.
உலகு, காசுக்கார வர்க்கத்திற்கு அழகியது.
வறுமை வர்க்கத்திற்குப் பயங்கரமானது
நான் தனிமையில் அழுதேன்.
நாய்கள் என்னைத் துரத்தின.
நான் எனக்குள் போராடினேன்.
நானோ தூக்கமற்று நடந்தேன்.

அது ஒரு கோடையிரவாயிருந்தது.

www.tamilarangam.net



இரத்த நிழல்களும்

கண்ணீர் நிழல்களும்
எனக்கு முன்னே ஒரு வறுமை நடனம் செய்தன.
இரத்தங்களும், கண்ணீர்களும் பேசின.

"மனிதன் போருடன் விழித்தான்.
வீணாக இறந்ததென்றில்லை.
எதிர்காலத்திற்காகவும்,
வாழ்விற்காகவும் இறந்தோம்.
மனிதன் போருடன் ஜெயிப்பான்!"
அவைகள் மறைந்து போயின.
இருட்டு, கடும் இருட்டு
நான் தனிமையாகத் திரும்பினேன்.

அது ஒரு கோடையிரவாயிருந்தது.

---

இரத்த நிழல் — க.கலாமோகன்

---

ஒரு டிரைடென்ற் நீர்மூழ்கிக் கப்பலின் விலை ஒரு வருடத்தில் 10 லட்சம் மரணங்களைத் தடுக்கும் வகையில் ஆறு கொடிய நோய்களுக்கெதிராக பிள்ளைகளுக்கு தடுப்பூசி போடும் ஐந்து வருடத்திட்டம் ஒன்றை அமுலாக்கத் தேவைப்படும்தொகைக்குச் சமமானதாகும்.

www.tamilarangam.net



# காயும் வயிறு

இழுத்துக் கட்டிய கோவணமும்
மரக்கால் தடியில்
தொங்கும் பறியும்
கடல் அலையோடு தத்தளிக்கும் கட்டுமரமும்
ஒரு சாண் வயிறும்
ஒதுங்க
ஓலைக்குடிசையும்
இவை தான் அவன் சொத்து

அலை அடித்துக் கொந்தளிக்கும்
அகால வேளையிலும்
கட்டுமரம் வலித்து
மீன் கொண்டுவரும்
இவன்
வயிறு காய்ந்து, முடக்கி உட்கார்ந்து
கடலைப் பார்க்கிறான்

தாயின் முலை வற்றினாலும்
வற்றாத கடல் அன்னைமேல்
வட்டமிடும் இயந்திரக் கழுகுகள்
என்று விலகும் என்று....

சத்தியன்

www.tamilarangam.net



# செழிப்பு

மாரி காலத்தை நோக்கிய
குரல்களின் அதிர்வு
பாறைகளையும் கிழித்து விட்டதில்
பதுங்கியிருந்த தவக்கைகள்
பள்ளங்களைத் தேடி அலைந்து
அங்கேயும் அழிந்து போயின.

வட்டுக்குள் பிறந்த
வண்டுகளே
முளைவிட்ட குருத்துத் துளிரை
நன்னுவதில்
உருக்கன் நோய் பிடித்து
பட்டுப் போவதா மரம்?

மணிவண்ணன்.

---

11 ம் பக்கத் தொடர்ச்சி.......

நிதியிலும் ஆயுதங்களிலும் தங்கியிருக்க கூடிய அமைப்புகளாக உருமாற்றிவிடுகின்றார்கள். இந்தத்தன்மை அவ்வமைப்புகளை இந்நிறுவனங்களின் நலன்களிற்கமைய செயற்படவேண்டியதாக்கி விடுகின்றது. அப்படி செயற்பட மறுக்கும் நிலைமைகளில் அழித்தொழிக்கபபடுகின்றது.

இலங்கைத் தமிழ் மக்களது போராட்டங்களில் புலிகளது வளர்ச்சியும் அவர்களது ஆளுமையும் TELO, PLOT, E.P.R.L.F அமைப்புகளை அழிதொழிப்பதும் இறுதியாக இன்று அரசுடன் இவர்கள் ஒப்பந்தம் செய்வதும், இவையெல்லாம் இவ்வல்லரசுகளின் ஆளுமைக்குட்பட்ட செயற்பாடுகளே. இச்செயற்பாடுகளினூடாக இலங்கைஅரசு வல்லரசு நாடுகளின் நலன்களிற்கமைய நிறுத்தப்படுவது மட்டுமல்லாமல் முக்கியமாக வர்க்கப் போராட்டங்களும் வர்க்க அமைப்புகளும் அழித்தொழிக்கப்படுகின்றன.

www.tamilarangam.net

# பிரான்ஸ் | தமிழ்தொழிலாளி சுட்டுக்கொலை



பிறப்பு: 12.05.1968
இறப்பு: 09.01.1990

செல்லத்துரை சரவணபவன், 22 வயது, அகதித் தொழிலாளி, சீன-தாய்லாந்து உணவகமொன்றிற்குள் வைத்து 09.01.1990 அன்று துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்டார். இவரோடு சேர்ந்து உணவகத்தின் பங்காளரும் பலியானர்.

இந்தச் சம்பவம் ஒரு "கணக்குத் தீர்த்தல்" நடவடிக்கையேயென்றும், செல்லத்துரை சரவணபவன் ஒரு "சாட்சி" யாக இருந்தார் என்பாதாலுமே கொல்லப்பட்டார் என பிரேஞ்சத் தினசரியான FRANCE-SOIR எழுதியுள்ளதுடன், இங்கு வாழும் ஆசிய சமூகத்தில் இடம்பெறும் குற்றங்களையும் சுட்டிக்காட்டியுள்ளது.

பிரான்ஸிலே அடிக்கடி அகதித் தொழிலாளர்கள்(வெளிநாட்டுத் தொழிலாளர்களும்) மர்மமாக மறைவதுண்டு. குறிப்பாக இலங்கையைச் சேர்ந்த தமிழ்பேசும் தொழிலாளர்கள் பலர் கொல்லப்பட்டுள்ளனர். இந்தக் கொலை நிரந்தர மர்மமாகவும், கவனிப்பாரற்றுப் போனதும் கண்டிக்கப்படவேண்டியதாகும்.

இங்கே தமிழ்பேசும் மக்களின்நலனின் பேரால் தொடங்கப்பட்ட அமைப்புகள், இது விடயத்தில் கண்மூடிக்கொண்டிருக்கும் போக்கை நாம் வன்மையாக கண்டிக்கும் இதேவேளையில் செல்லத்துரை சரவணபவன் இழப்பால் கதிகலங்கிப்போன அவரது குடும்பத்தினர், சகதொழிலாளர்கள், நண்பர்கள், இவர்களது துயரில் நாமும் பங்குகொள்கிறோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நண்பர்களுக்கு;

தபால் மூலம் "பள்ளம்" இதழ்களைத் தொடர்ச்சியாகப் பெறுவதற்கு (பிரதிகள்) நீங்கள் செலுத்தவேண்டிய அன்பளிப்பு 75 பிராங்குகள் மட்டுமேயாகும்.

படைப்புகள் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும்,

K.KANAGASINGAM,
39, RUE DE LA JONQUIERE
75017 PARIS.

கேள்வி: எந்தக் கருத்தையும் சுதந்திரமாக எழுதக்கூடியதாக உலகளாவிய ரீதியில் தமிழ்ச் சிறுகதைப்போட்டி ஒன்று பிரான்ஸில் நடக்குதாமே.

பதில்: சுதந்திரமாக எழுதுகின்ற எழுத்தாளர்கள் மேல் தொடுக்கும் சமூக அழுத்தம் இது.

போட்டிக்காக, பரிசிற்காக எழுதும் நிலையை உருவாக்குவதன் மூலம் எழுத்தாளர்களின் அடிப்படைச் சுதந்திரம் பறிக்கப்படுகிறது.